# சேந்தனார் திருப்பல்லாண்டில் மெய்யியல்

**முனைவர் இரா.துர்கா**

**திட்ட உதவியாளர்,மெய்யியல் துறை,**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.**

durganiksha8313@gmail.com

20

**ஆய்வுச் சுருக்கம்**

திருவெண்காட்டிற்கு அண்மையில் உள்ள நாங்கூர்ப் பதியில் அவதரித்த சேந்தனார் பட்டினத்தடிகளின் தலைமைக் கணக்கராய் விளங்கிய தன்மையர் ஆவர். இவர் பாடியருளிய திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று தலப்பதிகங்கள் திருவிசைப்பாவிலும் தில்லையைக் குறித்த தனிப்பதிகமாக திருப்பல்லாண்டும் அமையப்பெற்றுள்ளது.பல்லாண்டு என்னும் பதங்கடந்து என்றும் உள்ள பரம்பொருளாகிய இறைவனுக்குச் சேந்தனார் பல்லாண்டு இசைப் பாடியதன் நோக்கம், எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தும் மெய்யடியார்கள் எல்லோரும் உடல் நலமும், உள நலமும் ஒருங்கே எய்தி நெடுங்காலம் வாழ்ந்து, சிவநெறியை வளர்த்தல் வேண்டுமென்னும் பெருவேட்கையாகும். ‘சிவன் சீரடியார்’ எனப் போற்றப்பட்ட சேந்தனார், ‘எந்தையெந்தாய் சுற்ற மற்றுமெல்லாமென்னுடைய; பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்’ என இறைவனைப் பாடிப் போற்றிய திருவாத வூரடிகளே எனக் கருத இடம் உள்ளது. இதனை நோக்குமிடத்து திருவாத வூரடிகளுக்குப் பின் அவரடியார் குழுவின் வழியொழுகியவர் சேந்தனார் என்பது நன்குத் தெளியப்படும். சோழரது ஆட்சிப் பரவிய கடல் கடந்த வெளிநாடாகிய தாய்லாந்து நாட்டில் அரசர் குடும்பத்தில் நிகழ்ந்த பெரும் சடங்குகளில் திருவெம்பாவை, திருவாய்மொழி என்பவற்றுடன் ‘மன்னுகதில்லை’ எனத் தொடங்கும் இத்திருப்பல்லாண்டும் பாடப் பெறுதல் உண்டென்பர். இச்செய்தியை நோக்குங்கால் சேந்தனார்ப் பாடிய திருப்பல்லாண்டில் நம் சோழ மன்னர்களுக்கு உள்ள ஈடுபாடும் நன்கு விளங்குகின்றது. இத்திருப்பதிகம் அறுசீரடிகளாகலும் பாட்டுகளாலும் இயன்றது எனினும் சில பாடல்கள் வரையறை இன்றியும், சில அடிசீர் குறைந்தும் வரப்பெற்றுள்ளன. மேலும் இப்பதிகத்தில் பதின்மூன்று திருப்பாட்டுக்களை உடையதாய் இருத்தல் குறிப்பிடத்தக்கது

**திறவுச் சொற்கள்**

திருப்பல்லாண்டு, அடியார்கள், பித்தன், திருவருள், பல்லாண்டு வாழ்க, நம்பெருமான்.

**முன்னுரை**

பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் வாழ்த்தினைப் பல்லாண்டு என முதற்குறிப்புப் பெயராக வழங்குவர். அஃது இங்குக் காரியவாகுப் பெயராய் அவ்வாழ்த்தினைக் கூறுவதாகப் பதிகத்தைக் குறித்து நிற்கின்றது. எனவே இறைவனைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவது இத்திருப்பதிகம் என்பது பெறப்பட்டது. ‘இறைவன் என்றும் உள்ளனவாதலின் வாழ்த்துவார் வாழ்த்தும் வாழ்த்தினாதல் வைவார் வையும் வைவினானாதல்’ அவனுக்கு வருவது ஒன்றும் இல்லையாயினும்

வெகுளியுற்றார்க்கு அவ்வெகுளி காரணமாக அவனை வைதல் இயல்பாதல் போல அன்புற்றார்க்கும் அவ்வன்பு காரணமாக அவனை வாழ்த்தும் இயல்பாதலின் அடைக்கும் தாழ் இல்லாத அவ்வன்பின் செயல் அவர் மாட்டு இயல்பாக வெளிப்படுவதாம். இதனை நான்காம் திருப்பாட்டில் கூறுமாற்றானும் உணர முடிகிறது. அது நிற்க, 'கதிரவன் முன்னர்த் தாமரை மலர்தலும் ஆம்பல் குவிதலும் அதனதன் இயல்பானே ஆயவாறுபோல வாழ்த்தலும் வைதலும் செய்வார்' அதற்கு ஏற்ற பயனைத் தம்மியல்பால் தாம்பெறுவர் என்பதை உணரலாம்.

**சேந்தனாரின் திருப்பல்லாண்டு**

நம் அடியார்கள் பல்லாண்டு வாழ்க, அடிமைச் செய்ய ஒருப்படாதவர்கள் இல்லாதொழிய, பொன்மயமான மண்டபத்திலே நுழைந்து உலகமெல்லாம் நிலைப்பெறுமாறு நின்று, அன்னம் போன்ற நடையினை உடைய இளையவள் ஆகிய உமாதேவியின் தலைவன், அடியவர்களாகிய நமக்கு அருள் பாலித்து மேல்வரும் பிறவியை நாம் அறுத்துக் கொள்ளும்படி அடியேனுக்குத் தன் திருக்கூத்தாகிய அருளைப் பொலிந்து திருவடி ஞானத்தை அருளியுள்ளான். அந்தப் பித்தனை நாம் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக என்பதை,

"மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே" [1]

அதாவது எம்பெருமான் திறத்து உருகாத மனமுடையவர்கள் எங்களை விடுத்து நீக்குங்கள், உண்மை அடியவர்கள் விரைந்து வாருங்கள் என்பதாக இப்பாடல் அமைகிறது.

**அடியேனை ஆட்கொள்ளல்**

நம்மை அடக்கியாளும் இறைவன் பால் அவனுடைய திருவருளைக் கண்டு நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்கு வழங்கியும் எல்லாக் குடிகளில் உள்ளவர்களும் அடிமைச் செய்யுங்கள் என கூட்டமாகத் திருவம்பலத்துக்குச் செல்லும் மக்களிடம் கூறுகின்றார். அதாவது உலகங்களைக் கடந்த பொருள், எல்லையற்ற ஆனந்தப் பெருக்காகிய பொருள், பண்பாடு இன்றும் என்றும் உள்ள காலம் கடந்த பொருளாகிய நம் பெருமான் பல்லாண்டு வாழ்க, என் மனம் நெகிழுமாறு ஊறும் அமுதமாய், ஆலமரத்தின் நிழலில் அமர்ந்த குருமூர்த்தியாய், அடியேனைத்தன் அடிமையாக ஆட்கொண்ட நம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்பதாக,

"சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிசை யும்சில தேவர்

சிறுநெறி சேராமே" [2]

என்று மெய்மொழிகளால் நிறைந்த வேதப்பொருள்களை ஆராய்ந்து துணிந்த தூயமனத்தை உடைய அடியவர்கள், பொன்மலையாகிய மேருமலையை வில்லாகப் பணிக் கொண்ட அழகனாய், காளையை வாகனமாக உடையவனாய், பல ஆண்டுகள் காலத்தைக் கடந்தவனாய் உள்ள சிவபெருமான் பல்லாண்டு வாழ்க என்கிறார்.

**நீக்கமற நிறைந்தவன்**

எக்காலத்தும் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்தும் வேண்டியவற்றை வேண்டியவாறு நல்கும் கற்பகமரம் போல் எல்லையற்ற கருணைக் கடலாய் எல்லா இடங்களிலும் இருப்பதை,

"கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே" [3]

இப்பாடலில் காணமுடிகின்றது. விரிந்தும் இடையூரின்றி நிறைந்தும் எல்லைக் கடந்து நிற்கும் அடிகள் ஆகிய நம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோம். சிவநெறி ஒழுக்கமும் அவன் திருவருளும் அடியேனிடத்து நிலைபெற்று விளங்கும்படி, அச்சிவலோக நாயகனான பெருமானுடைய திருவடிகளின் கீழ், மற்ற யாவரும் பெறாமல் யாவரையும், யாவற்றையும் உடையவன் சிவபெருமானே என்று அறியும் அறிவினைப் பெற முடிகிறது. இளமகளிரின் கொங்கைகளில் பூசப்படும் குங்குமத்தைப் போல எம்பெருமான் திருமார்பில் திருநீறு விளங்குகிறது என்று அடியவர்கள் புகழ்ந்து கூற, திருமாலும் பிரமனும் அறிய முடியாத வழியைக்காட்டியதை,

"போறும் பொடியணி மார்பிலிங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே" [4]

இப்பாடலில் காணமுடிகின்றது. அடியேனுடைய உள்ளத்தினுள் பாலும் அமுதும் ஒத்த இனிமையானவனாகியப் புத்துயிர் அளிப்பவனாகியும், நிலை பெற்றிருக்கும் எம்பெருமான் வாழ்க பல்லாண்டு.

**பற்று அறுத்தல்**

பாலை உண்பதற்கு வியாக்கிர பாதமுனிவர் புதல்வனாகிய உபமன்யு என்ற சிறுவன் விரும்பிப் பால்பெறாது அழுது, வருந்த அவனுக்குப் பாற்கடலையே அழைத்து வழங்கிய பெருமானாய், ஒரு காலத்தில் திருமாலுக்குச் சக்கராயுதத்தை அருள் செய்தவனாய், நிலைப்பெற்ற தில்லைத் திருப்பதியிலே வேதம் ஓதும் அந்தணர்கள் வாழ்வதற்கு முதலாய் நிற்கின்ற சிற்றம்பலத்தையே இடமாகக் கொண்டு, அருளை வழங்கி நாட்டியத்தை நிகழ்த்தும் எம்பெருமான் பல்லாண்டு வாழ்க. இதனை திருவாசகத்தில் "**பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்**" [5] ஒப்புநோக்க முடிகின்றது. திருமால், நான்முகன், அக்னி, சூரியன், இந்திரன் முதலியோர் வந்தனர். தேர் ஓடும்

வீதியில் தேவர் கூட்டங்கள் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்தச் சிவபெருமானுடையப் பழமையான புகழைப் பாடியும், அதற்கு ஏற்ப ஆடியும், அந்த ஆதிரை நாளை உடைய அப்பெருமான் பல்லாண்டு என்று வாழ்த்துவோமாக என்பதை,

"நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே" [6]

என்பதாக இப்பாடல் அமைகின்றது. அதாவது அந்நாளை உடையானுக்குப் பால்லாண்டு கூறுவதும் எம்தந்தை, எம்தாய், எம்சுற்றம் மற்றும் எல்லாப் பொருளும் எமக்குச் சிவபிரானே என்று சிந்தைச் செய்யும் சீரடியார் போன்று இனிக்கும் சிவபெருமானே என்று தியானம் செய்யும், சிவபெருமானுடையச் சிறப்புடைய அடியவர்களின் திருவடிகளை வழிபடும் நாய்போல இழிந்தவனாகிய சேந்தன் தமது பல்லாண்டில்,

"சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்த சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே" [7]

அழிவில்லாத ஆனந்தத்தை வழங்கும் சிறந்த தேன்போல வந்து அடிமையாகக் கொண்டு அரிய உயிர்களின்மேல் நிற்கும் கட்டு நீங்குமாறு அருள் செய்தப் பெருமானே என்பதாக இப்பாடல் உணர்த்துகின்றது.

சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டில் தில்லைவாழ் அந்தணர்களின் அடியேனுக்கு அருளியதையும், நீக்கமற நிறைந்ததையும், ஆதிரை நாளை உடைய அப்பெருமான் பற்று அறுத்தலையும் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக எனக் கூறியதையும் இக்கட்டுரையின் வழி காணமுடிகின்றது.ஒவ்வொரு பாடலிலும் பல்லாண்டு வாழ்க பல்லாண்டு வாழ்க,என்பதாக இப்பதிகம் நிறைவடைகிறது. அவ்வழியே நாமும் இறைவனின் அருள்பெற்று பல்லாண்டு வாழ்வோமாக.

**மேற்கோள்கள்**

1.ஒன்பதாம் திருமுறை ப-29, பா.எ-1
2. மேலது ப-29 ,பா.எ-4
3. மேலது ப-29, பா.எ-5
4. மேலது ப-29, பா.எ-8

5 .திருவாசம் மூலமும் உரையும், ப-15, பா.எ-7

6. ஒன்பதாம் திருமுறை , ப-29, பா.எ-12

7. மேலது ப-29, பா.எ-13

**துணைநூற்பட்டியல்**

1. திருச்சிற்றம்பலம்.சிவ, சைவ சமயக் கலைக்களஞ்சியம், தோத்திரமும் சாத்திரமும், ராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை. முதற்பதிப்பு1986
2. வசந்தகுமார். இராச,ஒன்பதாம் திருமுறை , திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ,கற்பகம் பல்கலைக்கழகம் , கோவை. முதற்பதிப்பு2016
3. வெள்ளைவாரணன்.க, பன்னிருதிருமுறை வரலாறு, இரண்டு பாகங்களும் சாரதா பதிப்பகம் சென்னை. முதற்பதிப்பு -2008
4. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் , திருவாசகம் மூலமும் உரையும், ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்,திருப்பராய்த்துறை, பதினைந்தாம்பதிப்பு -2009